


தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-




# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR


TAMIL & ENGLISH MONTHLY

| கதிர் 57 | பாரிப்பு 6 | திருவள்ளுவர் ஆண்டு 2057 | ஜூலை - 2026 |
|---|---|---|---|
| KADHIR 57 | PAARIPPU 6 | THIRUVALLUVAR AANDU 2057 | JULY - 2026 |


## மாநில செயற்குழுக் கூட்டம்





நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநில துணைத் தலைவர் பொறியாளர் திரு C. P. மோகன்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் பொருளாளர் பொறியாளர் திரு V. சிவபிராகாசம், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், ஈரோடு கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் திரு S. முருகேசன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



**பொதுச்செயலாளர் மடல்**

மடல் - 6 (2025 - 2026)



# தொடரும்
## நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் பணிபுரிந்து கடந்த மே மற்றும் ஜூன் 2026 ஆம் மாதம் ஓய்வு பெற்ற பொறியாளர்கள் மற்றும் ஜூலை 2026 ஆம் மாதம் ஓய்வு பெற இருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை சார்ந்த பொறியாளர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஜூன் 9.06.2026 அன்று நடைபெற்ற மையச்சங்க நிர்வாகிகள் கூட்டத்தினை தொடர்ந்து 10.06.2026 அன்று மையச்சங்க நிர்வாகிகளுடன் தலைமைச் செயலகம் சென்று மதிப்பிற்குரிய முதன்மைத் தலைமைச் செயலாளர் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஆகியோரை சந்தித்து சங்கத்தின் கோரிக்கைகளை நிறைவேற்ற கோருமாறு மனு அளிக்கப்பட்டது. அதன்பிறகு 28.06.2026 அன்று மதுரையில் நடைபெற்ற மாநில செயற்குழுக்கூட்டத்திற்கு பிறகு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் கோரிக்கைகளை 08.07.2026 அன்று மதிப்பிற்குரிய முதன்மைத் தலைமை பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் பொதுப்பணித்துறை மற்றும் மதிப்பிற்குரிய இணைத்தலைமைப் பொறியாளர் நீர்வளத்துறை அவர்களை சந்தித்து கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் தோராயமாக உதவி செயற்பொறியாளர் (50) பணியிடங்கள் மற்றும் செயற்பொறியாளர் (16) காலி பணியிடங்களுக்கு அரசுக்கு ஒப்புதல் வேண்டி கடிதம் அனுப்புவதாக தெரியவருகிறது.

நீர்வளத்துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் தோராயமாக செயற்பொறியாளர் 14 காலி பணியிடங்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர் 44 காலிபணியிடங்களுக்கு ஒப்புதல் வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பதவி உயர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீர்வளத்துறையில் முதுநிலையில் உள்ள பணிபுரியும் மற்றும் பணி ஓய்வு பெற்ற உதவி செயற்பொறியாளர்களுக்கு "Special" செயற்பொறியாளராக தரம் உயர்த்துவதற்குரிய கோப்பு மதிப்பிற்குரிய நீர்வளத்துறை முதன்மைத் தலைமை பொறியாளர் அவர்கள் அரசுக்கு பரிந்துரைத்த கோப்பு குறைகளுடன் திரும்ப அனுப்பப்பட்டதால் குறைகளை களைந்து அரசுக்கு திரும்பவும் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

வருகிற ஆகஸ்ட் 09ம் தேதி 2026 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 2026-27 ஆம் ஆண்டிற்கான மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் சேலத்தில் நடைபெற உள்ளது. பொதுக்குழு உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற பொறியாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை இல்லம் கட்டடத்திற்கு புதியதாக இரண்டு பணியாளர்களை பணியமர்த்தி இல்லம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இல்ல கட்டடத்திற்கு புதியதாக வர்ணம்பூசி புனரமைப்பு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளதால் உறுப்பினர்கள் இல்ல கட்டடத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் ஒற்றுமை**
**வாழ்க வையகம், வாழ்க வளத்துடன்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**(சி. பன்னீர்செல்வம்)**
**பொதுச் செயலாளர்**

**Er.C. PANNEERSELVAM, General Secretary**
**Cell Nos.** } **94436 15580**, **96006 62435**
**E.mail: panneerselvamcps@gmail.com**

# 28.06.2026 அன்று மதுரையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 28.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி அளவில் மதுரை, TNEA பவளவிழா மாளிகை இல்லத்தில் மாநிலத்தலைவர் பொறியாளர் V. பரமசிவம் அவர்கள் தலைமையிலும், மாநில செயல்தலைவர் **"சாதனைச்செம்மல்"** பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் N.முருகேசன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். மதுரை கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் V. இரவிச்சந்திரன் அவர்களும், மையச் சங்கம் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் N.முருகேசன் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நமது சங்க நடவடிக்கைகள் குறித்து மாநிலத் தலைவர் பொறியாளர் V. பரமசிவம் அவர்கள் எடுத்துரைத்தார் அதனை தொடர்ந்து மாநில செயல்தலைவர் **"சாதனைச் செம்மல்"** பொறியாளர் த. முருகேசன் அவர்கள் சங்கத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார். மற்றும் மாநிலத் துணைத்தலைவர் R. வெங்கடேசபாபு அவர்கள் தன்னுடைய உரையில் கிளைச் சங்கங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால் இளநிலை வரைதொழில் அலுவலர்கள் (JDO) புதியதாக சேர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் C.பன்னீர்செல்வம் அவர்கள் தனது உரையில் தமிழ்நாடு பொறியியல் சங்க மேற்கூரை கட்டட புனரமைப்பிற்கு நிதியுதவி வழங்கிய கடலூர், கோவை - பொள்ளாச்சி மற்றும் சிவகங்கை கிளைச் சங்கங்களுக்கும், நிதியுதவி அளித்த சென்னை கிளையின் பொறியாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார் மற்றும் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் மையச் சங்கத்தின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர் V. இரவிச்சந்திரன் செயலாளர் மதுரை - இராமநாதபுரம் கிளை, பொறியாளர் G.அண்ணாமலை செயலாளர் புதுக்கோட்டை கிளை, பொறியாளர் K.R. ஜெயராமன் செயலாளர் திருச்சி கிளை, பொறியாளர் V.சிவபிராகாசம் பொருளாளர் தஞ்சாவூர் கிளை பொறியாளர் A. திருவேங்கடமூர்த்தி, மைய மண்டல செயலாளர், மற்றும் பொறியாளர் R. வேதமூர்த்தி, கிழக்கு மண்டல செயலாளர் ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார். மதுரை கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் திரு V. இரவிச்சந்திரன் அவர்களும் மையச் சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் N. முருகேசன்

அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**மாநில செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1.மாண்புமிகு தமிழக முதல்வர் C. ஜோசப் விஜய் தலைமையில் புதியதாக அமைக்க பெற்றுள்ள தமிழக அரசிற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறது.

2.புதியதாக பொறுப்பேற்றுள்ள பொதுப் பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆதவ் அர்ஜூனா அவர்களுக்கும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு N.ஆனந்த் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

3.மதிப்பிற்குரியபொறியாளர் A.நடராஜன் துணை தலைமைப் பொறியாளர் (மின்சாரம்) பொதுப் பணித்துறை அவர்களை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

4.பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் நீண்ட நாட்களாக காலியாக உள்ள 200 க்கும் மேற்பட்ட இளநிலை பொறியாளர் பணி இடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயத்தின் மூலம் தேர்வு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5.நீர்வளத்துறையில் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் காலியாக உள்ள பாசன ஆய்வாளர் (Irrigation Inspector) பணியிடங்களை நிரப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை என துறையினை இரண்டாக பிரித்ததனால் நீர்வளத் துறையில் முதுநிலையில் உள்ள மூத்த உதவிப் பொறியாளர்களுக்கு 'Special" உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் முதுநிலையில் உள்ள மூத்த உதவி செயற்பொறியாளர்களுக்கு 'Special" செயற்பொறியாளர்களாக தரம் உயர்த்தி பணப்பலன் வழங்க கோரி தீர்மானிக்கப்படுகிறது.

7.பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் காலியாக உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பணியிடங்களை தகுதி வாய்ந்த தமிழ்நாடு பொறியியல் சங்க உறுப்பினர்களை கொண்டு நிரப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8.தமிழ்நாடு பொறியியல் சங்க இல்லத்தினை பராமரிப்பதற்கு பகல் மற்றும் இரவு நேர பணியாளர்கள் என இரண்டு ஆட்களை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

9. தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேப்பாக்கம் அலுவலக மேற்கூரை புனரமைப்பிற்குண்டான செலவை சங்க உறுப்பினர்களிடமிருந்தும் மீதி தொகையினை பொங்கும் நிதி வைப்புநிதியிலிருந்தும் பயன்படுத்தி கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

10.தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான சுண்ணாம்பு குளத்தூரில் உள்ள இடத்தை அருகில் இருப்பவர்கள் ஆக்கிரமிக்கும் காரணத்தினால் அவற்றை விரைவில் விற்றுவிட வருகிற பொதுக்குழுவில் சொத்து பாதுகாப்பு குழு அமைப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

11.நீண்ட நாட்களாக விதித்திருத்தம் வழங்கப்படாமல் இருக்கும் அரசு ஆணை எண்.1 பொ.ப.து நாள் 02.01.1990க்கு விதித்திருத்தம் (Rule amendment) வழங்குமாறு இம்மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

12.தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை சார்ந்த அனைத்து கிளை சங்க பொறுப்பாளர்களும் மற்றும் அனைத்து மண்டல செயலாளர்களும்

அந்த அந்த மண்டலத்திற்குட்பட்டு 2026-2027ஆம் ஆண்டிற்கான கிளைச்சங்க நிர்வாகிகள் தேர்தல் நடத்தி 31.07.2026 க்கு முன்னதாகமையச்சங்கத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

13.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் இளநிலைப் பொறியாளர்கள் தேர்வு செய்வது காலதாமதமானதால் புதிய உறுப்பினர் சேர்க்கை நடைபெறாமல் உள்ளதாலும், ஏற்கனவே பதவியில் உள்ள பொறியாளர்கள் ஓய்வு பெற்றதாலும் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருவதாலும் சங்க செயல்பாடுகள் குறைய வாய்ப்பு உள்ளதாலும் சங்க விதிகளில் (Bye Laws) உள்ளது போல் பணிஓய்வு பெற்ற பொறியாளர்களும் பொறுப்பாளர்களாக தொடரலாம் எனவும், உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகும் வரை இந்த நடைமுறை தொடரும் என சேலத்தில் 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்குழுவில் இயற்றப்பட்ட தீர்மானத்தை தொடர்வது என இம்மாநில செயற்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது.

14.அடுத்த பொதுக்குழு வருகின்ற 09.08.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று மேற்கு மண்டலத்தை சேர்ந்த தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலத்தில் நடத்துவதாக தீர்மானிக்கப்படுகிறது.

## பணி ஓய்வு பெற்றவர்கள் (பொதுப்பணித்துறை)

(அரசாணை (வாலாயம்) எண். 95 பொதுப்பணித் (Estt-1-2) துறை நாள் 29.05.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | G. வெங்கடேசன் | தலைமைப் பொறியாளர் |
| 2. | S. லால்பகதூர் | தலைமைப் பொறியாளர் |
| 3. | R. ரங்கநாதன் | தலைமைப் பொறியாளர் |
| 4. | M. இளவேண்மாள் | தலைமை கட்டிட கலைஞர் |
| 5. | N. தில்லைக்கரசி | இணைத் தலைமைப் பொறியாளர் |
| 6. | P. செந்தில்குமார் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 7. | C. அய்யாசாமி | கண்காணிப்புப் பொறியாளர் |
| 8. | R. பாலகிருஷ்ணன் | செயற்பொறியாளர் (மின்) |
| 9. | C. வேலு | செயற்பொறியாளர் |
| 10. | R. ராஜமோகன் | செயற்பொறியாளர் |
| 11. | G. இளங்கோவன் | செயற்பொறியாளர் |
| 12. | A. பாலு | செயற்பொறியாளர் |
| 13. | S. செல்வராஜ் | செயற்பொறியாளர் (மின்) |
| 14. | S.R. இரவிச்சந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 15. | N. மீனாட்சி சுந்தரம் | உதவி செயற்பொறியாளர் |
| 16. | S. சிவசுப்ரமணியன் | உதவி செயற்பொறியாளர் |
| 17. | S. செந்தில் குமார் | உதவி செயற்பொறியாளர் |
| 18. | S. நாகராஜன் | உதவி வானொலி பொறியாளர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

சுஞ்சோங்கம் ஜாதக் சிறு
அரசு முதன்மைச் செயலாளர்

**ABSTRACT**

Public Works Department - Handing over of charges in a complete shape by the Assistant Engineer / Junior Engineer / Assistant Executive Engineer at the time of their relief from their sections / Sub Divisions on promotion, leave transfer etc - Amendment to Note 2 under Para 366 of Public Works 'D' Code and Note under Para 513 of Public Works 'A' Code - Orders - Issued.

**Public Works (G2) Department**

**G.O.Ms.No.262** **Dated: 18.08.2008**

**Aavani - 2.**

**Thiruvalluvar Aandu 2039**

**Read:**

1. G.O. Ms. No.1975, Public Works Department, dated 7.10.87.
2. From the then Chief Engineer (General), Chennai - 5 letter No. CII(3)/2759/ 95-1, dated 30.3.95.
3. From the Engineer- in- Chief, Water Resources Department & Chief Engineer (General),Chennai -5. letter No.CII(3)/ 2759/ 95-9 dated 10.01.06.

**ORDER:**

In the Government order 1st read above the Government have issued amendments to para 366 of Public Works 'D' code and para 513 of Public Works 'A' code in connection with handing over of charges by Assistant Engineer / Junior Engineer / Assistant Executive Engineer at the time of their relief. According to the said Government Order, the relieved officers can hand over their charges to their successors on their arrival by signing the C.T.C. and they can join duty in the new station. Afterwards and within 60 days from the assumption of charge by the successors they have to point out the discrepancies in the materials account, to their predecessor and within the same 60 days, the concerned Assistant Executive Engineers and Executive Engineers should inform the relieved officers about the discrepancies in the account of materials.

2. The Chief Engineer (General) in his letter second read above has stated that the procedure for account of materials as prescribed in paras 322, 323, 329, 340, 341 of PW 'A' code are fool proof for maintaining perfect accounts but implementation involves collective responsibility among the officers viz., Junior

Engineer / Assistant Engineer / Assistant Executive Engineer and Executive Engineers. If any one among Assistant Engineer/ Junior Engineers is slack or fall to follow the said codal provisions scrupulously the entire system fails as in the case of failure of a chain with several links in its performance due to the presence of one broken link in the chain even though all the other links in the chain is strong enough. Mere ordering of recovery of the value of materials which were found short will in no way help the administration in safeguarding the interests of the Government, but will encourage the officers to misappropriate the Government property in one lump sum and to repay the same through several instalments after several years. Therefore the Chief Engineer (General) has opined that the orders of Government issued in G.O.Ms.No.1975 Public Works Department dated 07.10.87 are observed more in breach than in practice and the very purpose of the orders of Government amending Note 2 under para 366 of PW ‘D’ code and note under para 513 of Public Works ‘A’ code are defeated because of the evasive attitude of the officers. Such attitude of the officers are to be discouraged to prevent loss to Government and in order to inculcate responsibilities on the officers, they have to be forced to follow revisied procedures.

3. The Engineer-in-Chief and Chief Engineer (General) in his letter third read above has suggested that the discrepancies in the charge papers should be communicated to the Relieved Officer, within 60 days from the date of signing of CTC., from the Sub Divisional Officer to the relieved officer and accordingly suggested amendments to Note 2 under para 366 of the Tamil Nadu Public Works ‘D’ code and Note under para 513 of the Tamil Nadu Public Works ‘A’ code.

4. The Government have decided to approve the proposal of the Engineer-in-Chief, Water Resources Department & Chief Engineer (General) sent in his letter third read above and accordingly issue the following amendment to the Tamil Nadu Public Works ‘D’ code and the Tamil Nadu Public Works ‘A’ Code:-

**AMENDMENT**

Tamil Nadu Public Works ‘Department’ Code:-

In para 366 of the Public Works ‘D’ code for the existing Note 2, the following Note shall be substituted, viz.,:-

“Note:2 The relieved officer should hand over transfer papers, within 15 days from the date of signing of C.T.C. and the discrepancies, if any in the transfer papers, should be communicated to the relieved officer, within 60 days from the date of relief of the relieved officer by the Sub Divisional Officer under whose control the section office lies”.

Tamil Nadu Public Works ‘Account’ Code:-

In para 513 of the Public Works 'Account' code for the existing Note, the following Note shall be substituted, viz.,:-

"Note The relieved officer should hand over transfer papers, within 15 days from the date of signing of C.T.C. and the discrepancies, if any in the transfer papers should be communicated to the relieved officer, within 60 days from the date of relief of the relieved officer by the Sub Divisional Officer under whose control the section office lies".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. AUDISESHIAH**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT.**

## பணி ஓய்வு பெற்றவர்கள் (நீர்வளத்துறை)

(அரசாணை (வாலாயம்) எண். 297, நீர்வளத் (D2) துறை நாள் 29.05.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | S. மதனசுதாகரன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 2. | G. ஆஸம்பாஷா | துணை கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. | R. சாந்தி | செயற்பொறியாளர் |
| 4. | K. அருள் அழகன் | செயற்பொறியாளர் |
| 5. | P. கலைச்செல்வி | முதன்மை பணியாளர்அலுவலர் |
| 6. | C. மார்கண்டன் | உதவி செயற்பொறியாளர் |
| 7. | K. சேரலாதன் | உதவி செயற்பொறியாளர் |
| 8. | D. மணிவண்ணன் | உதவி செயற்பொறியாளர் |
| 9. | C.P.மோகன் குமார் | உதவி செயற்பொறியாளர் |
| 10. | S.கண்ணன் | உதவி செயற்பொறியாளர் |
| 10. | C. பாலமுரளிதரன் | உதவி செயற்பொறியாளர் |
| 11. | R. சுப்ரமணியன் | உதவி செயற்பொறியாளர் |
| 12. | K. கலைச்செல்வன் | உதவி செயற்பொறியாளர் |
| 13. | K.சதாசிவம் | உதவி செயற்பொறியாளர் |
| 14. | S. முருகேசன் | உதவி செயற்பொறியாளர் |
| 15. | M. சின்னராஜ் | உதவி செயற்பொறியாளர் |
| 16. | R.V. இரவிச்சந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 17. | G. குருபாக்கியம் | உதவி செயற்பொறியாளர் |
| 18. | A. விஜயகுமார் | உதவி செயற்பொறியாளர் |
| 19. | S. மகாலிங்கம் | கணினி திட்டமிடுபவர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

சத்யபிரதா சாகு
அரசு முதன்மைச் செயலாளர்

**Finance (TAPS) Department,**
**Secretariat,**
**Chennai- 600 009.**

**Letter No. 14190711/Finance (TAPS)/ 2026-3, dated:02.07.2026**

From

Thiru. M.A. Siddique, 1.A.S.,
Additional Chief Secretary to Government.

To

All Administrative Departments in Secretariat, Chennai — 9 (w.e).
All Heads of Department (w.e).

Sir/ Madam,

Sub: Pension Sustenance support to eligible Government servants retiring under the CPS on or after 01.01.2026 till the notification of regular TAPS rules - Interim Pay- out Clarification sought for - Issued.

Ref: 1. G.O. (Ms) No.7, Finance (PGC) Department, dated 09.01.2026.
2. G.O.(Ms) No.111, Finance (TAPS) Department, dated16.06.2026.

The Government have issued orders in the G.O. 2" cited for the sanction of sustenance support to eligible Government servants retiring on or after 1.1.2026 in the intervening period till notification of Tamil Nadu Assured Pension Scheme (TAPS).

2. In this context, based on the discussions held with the Director of Treasuries and Accounts to finalise the procedure for disbursal of the interim payout/ family payout through the Kalanjiyam portal, the following clarifications are issued:

| S. No | Point of Clarification Clarification | Clarification issued |
|---|---|---|
| (i) | Whether notional increment as per FR 26-A is applicable for calculating interim payout | For the purpose of interim monthly payout, it shall be sanctioned based on actual pay drawn in the last month. |
| (ii) | Whether Dearness Relief is to be booked under separate under detailed sub-detailed head | The interim payout / family payout and the dearness relief thereon, shall be booked under one and composite detail/ sub- detailed head. The Director of Treasuries and Accounts shall make necessary arrangements to provide a MIS report in Kalanjiyam to have break-up of interim payout / family payout and Dearness Relief thereon, |


| | | |
|---|---|---|
| (iii) | Whether Life Time Arrears (LTA) is applicable for interim payout family payout | In the event of death of the superannuated person who received the full interim payout for the month, the excess amount calculated from the date next to the date of death during the month shall be adjusted against the interim monthly family payout payable to the eligible family member by the Treasury /PAO concerned.<br>In case of no claimant from the family, the occurrence of such excess payment shall be brought to the notice of the Government by the Director of Treasuries and Accounts on a quarterly basis. |
| (iv) | Whether Income Tax be deducted from Interim Payout /Family payout | Applicable IT shall be deduced at source as Per the Income Tax Act. |
| (v) | How the orders issued in G.O. second cited be applied to retirees on superannuation on or after 1.1.2026 but dies before making option for interim payout | The eligible family member of the deceased retired Government servant shall be provided with same set of options made available to the retired Government servant for opting the intermpayout as per the Government Order second cited, i.e., opting for interim monthly family payout and the two stage exit options (immediate opt-out or post notification opt out) |
| (vi) | Whether there is need for uniformity in Interim monthly payout/ family payout sanction order across departments, | In order to convey the precise content of the sanction to be issued by competent authority draft sanction paragraphs are prescribed (enclosed to this letter) or the purpose of uniformity. |
| (vii) | Whether 30% of LPD and the Dearness Relief be rounded off | The fraction of a rupee shall be rounded off to the next higher rupee separately. |

Yours faithfully,


Sd-

for Additional Chief Secretary to Government.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு C. மார்கண்டன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு S. சிவசுப்ரமணியன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், வேலூர் கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் திரு K. சேரலாதன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், மதுரை கிளையின் தலைவர் பொறியாளர் திரு. G.இளங்கோவன், செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், விருதுநகர் கிளையின் தலைவர் பொறியாளர் திரு. R.V. இரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல்- தேனி கிளை தலைவர் பொறியாளர் திரு A.பாலு, செயற்பொறியாளர் அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், ஈரோடு கிளையின் இணைச் செயலாளர் பொறியாளர் திரு M.சின்னராஜ், உதவி செயற் பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் திரு S.செந்தில்குமார், உதவி செயற் பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு.K.கலைச் செல்வன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், மதுரை கிளையின் முன்னாள் இணைச்செயலாளர் பொறியாளர் திரு.D. மணிவண்ணன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் திருமதி G.லலிதா, உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம், கோவை-பொள்ளாச்சி கிளையின் செயலாளர் பொறியாளர் திரு S.R. இரவிச்சந்திரன் உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், மதுரை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு.R. பொன்னுசாமி, செயற் பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் - தேனி கிளை உறுப்பினர் பொறியாளர் திரு. S.தனசேகர் உதவி செயற் பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



**Draft contents for sanction of Interim Monthly Payout to the Government servants enrolled under Contributory Pension Scheme and retired on account of Superannuation on or after 01.01.2026**

Sub: INTERIM MONTHLY PAYOUT - Government servant enrolled under Contributory Pension Scheme and retired on superannuation on or after 01.01.2026 — Sanction of Interim Monthly Payout — Reg.

Ref: 1. G.O.(Ms) No.111, Finance (TAPS) Department, dated 16.06.2026.

2. CPS Subscriber Index No........... of the retired Government servant.

3. Option exercised by the individual concerned dated.........

In accordance with the orders contained in the Government Order first cited and based on the option exercised by Thiru/ Tmt. .. (Name of the retired Government servant), who worked in the post of ......... (Designation) and retired on superannuation on.................. in the office of . (last worked office), a sum of Rs......... /- is hereby authorized as interim monthly payout to the individual with effect from .................. FN.

2) The ..... (Name of treasury office concerned) is requested to make the disbursement of the interim monthly payout authorized in paragraph one above to the individual concerned as per the details furnished in the annexure.

/True copy//

-Sd-

Section Officer.

**Draft contents for sanction of Interim Monthly Family Payout to the eligible family member of the Government servants enrolled under Contributory Pension Scheme and deceased on or after 01.01.2026**

Sub: INTERIM MONTHLY FAMILY PAYOUT - Government servant enrolled under Contributory Pension Scheme - Death-in-harness - Deceased on or after 01.01.2026— Sanction of Interim Monthly Family Payout to the eligible family member - Reg.

Ref: 1. G.O.(Ms) No.111, Finance (TAPS) Department, dated 16.06.2026

2. CPS Subscriber Index No........... of the deceased Government servant

3. Option exercised by the individual concerned dated.........

In accordance with the orders contained in the Government Order first cited and based on the option exercised by Thiru/ Tmt. .................... (Name of the eligible family member), .......... (Relationship with deceased Government servant), of Thiru / Tmt. ................ (Name of the deceased Government servant), who worked in the post of ..................... (Designation) in the office of ………….(last worked office) and

deceased on ... ,a sum of Rs……. /- is hereby authorized as interim monthly family payout to the individual with effect from .................. FN.

2) The ......... (Name of treasury office concerned) is requested to make the disbursement of the interim monthly family payout authorized in paragraph one above to the individual concerned as per the details furnished in the annexure.

/True copy//

-sd-

Section Officer.

**Draft contents for sanction of Interim Monthly Family Payout to the eligible family member of the Government servants enrolled under Contributory Pension Scheme who superannuated and deceased on or after 01.01.2026**

Sub: INTERIM MONTHLY FAMILY PAYOUT - Government servant enrolled under Contributory Pension Scheme — Superannuated and deceased on or after 01.01.2026- Sanction of Interim Monthly Family Payout to the eligible family member - Reg.

Ref: 1. G.O. (Ms) No.111, Finance (TAPS) Department, dated 16.06.2026.

2. CPS Subscriber Index No........... of the superannuated and deceased Government servant.

3. Proceedings of the ... (Authority - who authorised Monthly Payout) No…… dated …….

In the proceedings third cited, authorization was issued for a sum of Rs......../- as interim monthly payout with effect from ............. FN to Thiru/ Tmt. ................... (Name of the deceased Government servant), who worked in the post of .................. (Designation) and retired on super annuation on ................in the office of ... (last worked office). The retired Government servant expired on ... (date of death).

2) In these circumstances, in accordance with the orders contained in the Government Order first cited, a sum of Rs......... /- is hereby authorized as interim monthly family payout with effect from ................... FN to Thiru / Tmt. ............. (Name of the eligible family member), ................ (Relationship with deceased Superannuated Government servant), of Thiru / Tmt. ….... (Name of the deceased Superannuated Government servant).

3) The ............ (Name of treasury office concerned) is requested to make the disbursement of the interim monthly family payout authorized in paragraph two above to the individual concerned as per the details furnished in the annexure.

4) The interim monthly payout already disbursed for the period from......to……

(after the demise of the retired Government servant) shall be adjusted against the interim monthly family payout(s) by the ........(Name of treasury office concerned).

//True copy//

Sd
Section Officer.

**TREASURIES AND ACCOUNTS DEPARTMENT**

From
Tmt. T. Charusree I.A.S.,
Director of Treasuries and Accounts,
3rd Floor,Perasiriyar K.Anbazhagan Maaligai,
No.571, Anna Salai, Nandanam,
Chennai- 600 035.

To
All Pay and Accounts Officers,
All Treasury Officers,
All Sub Pay and Accounts, Officers.

**Rc.No.CTA /2/2026 -NHIS -2 Dated:02-07-2026**

Sub: New Health Insurance Scheme, 2026 - Implemented for the period from 01.07.2026 to 30.06.2031 - Government employees and Pensioners - certain instruction issued - Reg.

Ref: 1. Go.Ms.No.160 Finance (Salaries) Department, Dt:29.06.2021 .
2. Go.Ms.N0.204 Finance (Health insurance) Dept. Dt:30.06.2022
3. Go.Ms.No.145 Finance (Health Insurance) Dept. Dt:24.06.2025
4. Go0.Ms.No.122 Finance (Health Insurance) Dept. Dt:24.06.2026
5 . Go0.Ms.No.123 Finance (Health Insurance) Dept. Dt:24.06.2026

Kind attention is invited to the references cited.

As per the references first to third cited, the New Health Insurance Scheme, 2021 for Government Employees and the New Health Insurance Scheme, 2022 for Pensioners were implemented for the period from 01.07.2021 to 30.06.2026 and 01.07.2022 to 30.06.2026, respectively. The above schemes expired on 30.06.2026.

Subsequently, in the fourth and fifth references cited, the Government has implemented the New Health insurance Scheme, 2026 for a block period o f five years, from 01.07.2026 to 30.06.2031, for the Employees of Government Departments and their eligible family members, and for Pensioners (including spouse) / Family Pensioners. The Scheme shall be implemented through United India Insurance Company Limited, Chennai, in accordance with the Guidelines for Implementation of the New Health Insurance Scheme, 2026 for Employees of Government Departments and their eligible family members and Pensioners (including spouse) / Family Pensioners, appended as Annexure-A to the Government Orders cited in the fourth and fifth references.

In this regard, all the subordinate officers in the address entries are requested to explain the details of the New Health Insurance Scheme, 2026, as contained in Annexure-A (Guidelines), during meetings with Drawing and Disbursing Officers (DDOs) and Pensioners' Associations, so as to create awareness among Government Employees and Pensioners.

**The following points shall be highlighted during the meeting for employees**.

| Sl No | Points | Details |
|---|---|---|
| 1 | Cashless facility | A **Package Rate Based cashless service** extended by the Public Sector Insurance Company (Insurer) to the beneficiary (Insured) whereby the payments for the costs of treatment undergone by the beneficiary (Insured) in accordance with the Guidelines { policy terms and conditions), are directly made to tha network hospital by the Public Sector Insurance Company (Insurer) subject to the eligible package rate for the treatment / Procedure according to the grade of the hospital as mentioned in the Annexure I & I-A. |
| 2 | Eligible Family Members | Clause - 3 of Annexure - A<br>All eligible family members as per in clause - 3 must] **update in e- SR** in IFHRMS portal **within 15 days from the date of commencement of the Scheme.**<br>AS per **clause 6** in **Go. Ms. No.122** Finance (Health Insurance) Dept. Dt:24.06.2026 the Opticn to be exercised for certain cases:<br>(a) In cases where both husband and wife are State Government employees, the employee's subscription shall be recovered from only one of them, i.e., from the younger of the two (husband or wife)<br>(b) In case the Employee joined Tamil Nadu State Government Service after retiring from Armed Forces (Ex-Serviceman) and covered under Ex-Serviceman Health scheme, may exercise option to opt out of NHIS 2026 Scheme.<br>(c) The option shall be **exercised within 15 days** from **the date of commencement of the Scheme.** |
| 3. | Subscriptions to the Scheme | **The employee drawn under Special Time Scal of Pay:**<br>All Employees working as Sweepers / Sanitary workers, |

| | | |
|---|---|---|
| | | Anganwadi, Noon Meal workers, Village Assistants etc., covered under Special Time Scale of Pay will be covered under New Health Insurance Scheme-2026. However, the subscription for NHIS-2026 will not be deducted for the employees drawn under Special Time Scale of Pay for those whose Gross Pay [Basic Pay + Dearness Allowance] Consolidated Pay is less than Rs.10,000/- per month and the subscription amount in respect of such employees shall been borne by the Government for the period from 01.07.2026 to 30.06.2031.(In **Go. Ms. No.122** Finance (Health Insurance) Dept. Dt:24.06.2026 **clause 8**) |

**The following points shall be highlighted during the meeting for Pensioners.**

| Sl. | Points | Details |
|---|---|---|
| 1. | Cashless Facility | A **Package Rate Based cashless service** extended facility by the Public Sector Insurance Company (Insurer) to the beneficiary (Insured) whereby the payments for the of cost treatment undergone by the beneficiary (Insured) in accordance with the Guidelines (policy terms and conditions), are directly made to the network hospital by the Public Sector Insurance Company (Insurer) subject to the eligible package rate for the treatment procedure according to the grade of the hospital as mentioned in the Annexure I & I-A. |
| 2. | Eligible Family Members | Clause - 3 of Annexure - A<br>All eligible family member as per in clause - 3 must be updated in Pensioners data in IFHRMS portal **within 15 days from the date of commencement of the\| Scheme.**<br>As per **clause 6** (2) in **Go. Ms, No.123** Finance (Health Insurance) Dept. Dt:24.06.2026**,** the Option is to be exercised for certain cases.<br>(a) All India Service (AIS) Pensioner.<br>(b) A Pensioner who is a recipient of All India Service (AIS) Family Pension.<br>(c) If the spouse of the Pensioner is a State Government Employee, the Subscription shall be deducted from the salary of the employee only.<br>(d) If both Husband and Wife are State Government] Pensioners, Pensioner’s Subscription<br>(e) If a Pensioner is also a Family Pensioner. |

| | | |
|---|---|---|
| | | (f) If an individual draws more than one Family . Pension The option is to be submitted **before the completion of One month(23.07.2026)** from the date of issue of order of NHIS 2026 scheme it shall be construed that the above said categories of Pensioners/ Family Pensioners are willing to enroll themselves under this Scheme. |
| 3. | Subscriptions to the Scheme | **The employees drawn_under special Time Scale of Pay**:<br>Pensioners covered under Special Time Scale such as Sweepers / Sanitary workers, Anganwadi, Noon Meal workers, Village Assistants, Ex- gratia Pensioner / Ex-Gratia family pensioners, who getting Compassionate allowance, etc, irrespective of their gross pension are exempted from the New Health Insurance Scheme- 2026 and shall **be included under the Chies Minister's Comprehensive Health Insuranc Scheme-Tamil Nadu.** However, the subscription for, NHIS-2026 will not be deducted for the above category) of Pensioners. (In **Go. Ms. No.123** Finance (Health Insurance) Dept. Dt:24.06.2026 **clause 8(g))** |

Hence, all subordinate officers is requested to take necessary and prompt follow-up action.They are further requested to convene meetings with all Drawing and Disbursing Officers (DDOs) and representatives of the Pensioners' Associations. After the meetings, a communication incorporating the above-mentioned points shall be issued **with acknowledgement** to each DDO and all Pensioners' Associations to create awareness about **NHIS, 2026** among all Government employees and Pensioners.

All subordinate officers is instructed to request the DDOs to display the key points of NHIS 2026 on the office notice board in a prominent location wherethey can be easily seen by Government employees.

T CHARUSREE IAS
Director of Treasuries and Accounts

//Forwarded by order//

-Sd-
Joint Director NHIS

## பணி ஓய்வு பெற்றவர்கள் (நீர்வளத்துறை)

(அரசாணை (வாலாயம்) எண். 349, நீர்வளத் (D2) துறை நாள் 30.06.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | K. கணபதி ரமேஷ் | செயற்பொறியாளர் |
| 2. | U. அறிவொளி | உதவி செயற்பொறியாளர் |
| 3. | A. ராஜா சிதம்பரம் | உதவி செயற்பொறியாளர் |
| 4. | S. கந்தசாமி | உதவி செயற்பொறியாளர் |
| 5. | V. சிவபிரகாசம் | உதவி செயற்பொறியாளர் |
| 6. | S. தனசேகர் | உதவி செயற்பொறியாளர் |
| 7. | M.A. ஜவஹருதீன் | உதவி செயற்பொறியாளர் |
| 8. | S. மோகனசுந்தரம் | உதவி செயற்பொறியாளர் |
| 9. | K. புகழேந்தி | உதவி செயற்பொறியாளர் |
| 10. | S. மதியழகன் | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

சத்யபிரதா சாகு

அரசு முதன்மைச் செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள் (பொதுப்பணித்துறை)

(அரசாணை (வாலாயம்) எண். 112, பொதுப்பணித் (Estt- 1-2) துறை நாள் 30.06.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | S.S. விஜயலட்சுமி | கண்காணிப்பு பொறியாளர் (அயர்பணி) |
| 2. | R. பொன்னுசாமி | செயற்பொறியாளர் |
| 3. | P. பாலன் | செயற்பொறியாளர் (மின்) |
| 4. | P. சண்முகாநதி | உதவி செயற்பொறியாளர் |
| 5. | M. ரவிந்திரன் | உதவி செயற்பொறியாளர் |
| 6. | T. மோகன கிருஷ்ணன் | உதவி செயற்பொறியாளர் |
| 7. | G. லலிதா | உதவி செயற்பொறியாளர் |
| 8. | S. முருகேசன் | உதவி செயற்பொறியாளர் |
| 9. | M.S. ரவி | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

R. செல்வராஜ்

அரசு செயலாளர்

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் உறுப்பினர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே சென்னைக்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் சென்னை பொறியியல் இல்லத்தை பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## 09.06.2026 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 09.06.2026 அன்று மாலை 5.00 மணிக்கு சென்னை சேப்பாக்கம் தமிழ்நாடு பொறியியல் சங்க அலுவலகத்தில் மாநிலத்தலைவர் பொறியாளர் வி. பரமசிவம் தலைமையிலும், "சாதனைச்செம்மல்" செயல்தலைவர் பொறியாளர் த. முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத்தலைவர் பொறியாளர் வி. பரமசிவம் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினார். "சாதனைச்செம்மல்" செயல்தலைவர் பொறியாளர் த. முருகேசன் அவர்கள் சங்கத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.

பொதுச்செயலாளர் பொறியாளர் சி. பன்னீர்செல்வம் அவர்கள் தமது உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

**தீர்மானங்கள்:-**

1. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத் துறையில் நீண்ட நாட்களாக காலியாக உள்ள இளநிலைப் பொறியாளர் பதவிகளை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உடனடியாக நிரப்ப வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

2. நீர்வளத்துறையில் காலியாகவுள்ள உதவிசெயற்பொறியாளர் பணியிடங்களுக்கு இச்சங்கத்தை சார்ந்த தகுதிவாய்ந்த இளநிலை பொறியாளர்களுக்கு உடனடியாகப் பதவி உயர்வு வழங்ககோரி தீர்மானிக்கப்படுகிறது.

3. பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள செயற்பொறியாளர் பணியிடங்களை தகுதி வாய்ந்த இச்சங்கத்தை சார்ந்த உதவிசெயற்பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க கோரி தீர்மானிக்கப்படுகிறது

4. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை என துறையினை இரண்டாக பிரித்ததனால் நீர்வளத்துறையில் முதுநிலையில் உள்ள மூத்த உதவி பொறியாளர்களுக்கு "Special" உதவிசெயற்பொறியாளர்களாகவும் மற்றும் முதுநிலையில் உள்ள மூத்த உதவிசெயற்பொறியாளர்களுக்கு "Special" செயற்பொறியாளராகவும் தரம் உயர்த்தி பணப்பலன்கள் வழங்க கோரி தீர்மானிக்கப்படுகிறது.

5. தமிழ்நாடு பொறியியல் சங்க கட்டிடத்தில் பழுதான மேற்கூரையை அகற்றிவிட்டு புதிதாக மேற்கூரை அமைக்கவும் மற்றும் வர்ணம் பூசவும் ஒப்பந்ததாரர் திரு. K. லட்சுமி நாராயணன் (RANI ENGINEERING & CONSTRUCTION) அவர்கள் மூலமாக பணிகளை செயலாக்கம் செய்ய மையச்சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் வருகிற 28.06.2026 அன்று மதுரையில் நடத்துவதற்கு மையச்சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# 09.08.2026 சேலத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**இடம் : பொறியாளர் C.சண்முகப்பெருமாள் அரங்கம், பொறியாளர் S. ஜானகிராமன் இல்லம்**
**TNEA சேலம் கிளை**
**பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகம்,**
**அஸ்தம்பட்டி, சேலம் - 636 007.**

**நாள்: 09.08.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி**

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. அவை அறிமுகம் - அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர்
3. வரவேற்புரை:
   அ) சேலம் கிளை சார்பாக - தலைவர் சேலம் கிளை
   ஆ) மையச் சங்கம் சார்பாக - மேற்கு மண்டலச் செயலாளர்
4. இரங்கல் தீர்மானம்
5. செயல் தலைவர் உரை
6. தலைவர் உரை
7. துணைத் தலைவர் உரை
8. சங்க நடவடிக்கைகள் - பொதுச் செயலாளர்
9. உறுப்பினர் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தல்
10. அ) 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, செயலாளர் (நிதி)
    ஆ) 2025-2026ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, ஆய்வு மற்றும் உட்தணிக்கை குழு அறிக்கை ஆய்வு
11. 2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, செயலாளர் (பொங்கும் நிதி)
12. 2026-2027 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கணக்கு உட்தணிக்கை குழு அமைத்தல்.
13. கிளை செயல்பாடுகள் - மண்டலச் செயலாளர்கள்
    அ) கிளைப் பொதுக்குழுவில் உறுப்பினர்கள் - பங்கேற்பு
    ஆ) கிளைச் செயல்பாடுகள்
    இ) கிளை எதிர்பார்ப்பு
    ஈ) ஆலோசனை
14. இதர பொருட்கள்
    அ) பொறியியல் இல்லம், இல்லக் காப்பாளர்.
    ஆ) சுண்ணாம்பு குளத்தூர் இடம் சம்மந்தமாக வழிகாட்டுதல் குழு அமைத்தல்
15. 2026-2027 ஆம் ஆண்டிற்கான மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்வு செய்ய தேர்தல் அதிகாரி நியமித்தல்

16. மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல்
18. புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்
19. புதிய பொறுப்பாளர்கள் நன்றியுரை.
20. தீர்மானங்கள்
21. அடுத்த மையச் செயற்குழு நாள், இடம் நிர்ணயித்தல்
22. நன்றியுரை
    கிளைச் சங்கம் சார்பாக - சேலம் கிளை செயலாளர்
    மையச் சங்கம் சார்பாக - செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்
23. நாட்டுப்பண்

தங்கள் அன்புடன்
என். முருகேசன்
செயலாளர் அமைப்பு & சட்டம்
தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.து & நீ.வ.து
சேப்பாக்கம், சென்னை-05.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு. S. பாபு, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.5,000/-(ஐந்தாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியுள்ளார்.

சிவகங்கை கிளைச்சங்கம் சார்பாக தமிழ்நாடு பொறியியல் சங்கம், சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.5,000/-(ஐந்தாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் திரு K.கலைச்செல்வன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) தஞ்சாவூர் கிளை வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் திரு M.பிரதாப் பிரேம்குமார், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) தஞ்சாவூர் கிளை வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கடலூர் கிளையின் உறுப்பினர் மூத்த பொறியாளர் திரு G. ரங்கசாமி, இளநிலை பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 25.06.2026 அன்று இயற்கை எய்தினார். இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் துணைத்தலைவர் பொறியாளர் திரு M.A.ஜவஹருதீன், உதவி செயற் பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், கன்னியாகுமரி கிளையின் செயலாளர் பொறியாளர் திரு S.முருகேசன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருச்சி கிளையின் முன்னாள் இணைச் செயலாளர் பொறியாளர் திரு S.கந்தசாமி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



Under Postal Regd No. TN/CH/(C)/591/2025-2027 & WPP LICENCE No.TN/PMG(CCR)/WPP-664/2025-2027,
Date of Publiciation 1st Week of Every Month. R.N.I. No.R.33590/1978. Posted on 5-11 of Every Month

JULY 2026

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை & நீர்வளத்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

# மாநில பொதுக்குழுக் கூட்டம் அழைப்பிதழ்

வருகிற ஆகஸ்ட் 09ம் தேதி 2026 ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் 2026-27 ஆம் ஆண்டிற்கான மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் சேலத்தில் நடைபெற உள்ளது.

இடம்: பொறியாளர் **C.**சண்முகப்பெருமாள் அரங்கம்,
பொறியாளர் **S.** ஜானகிராமன் இல்லம்
**TNEA** சேலம் கிளை
பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகம்,
அஸ்தம்பட்டி, சேலம் - 636 007.

பொதுக்குழு உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற பொறியாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. என்.முருகேசன்,
அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சேப்பாக்கம், சென்னை – 5.

தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,